கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 - 22.02.2011


Online Newspaper in Tamil Vol.10 12.08.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவனா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஹீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (61)

**61.இந்தியக் காந்தியும், ஈழத்தில் அவரது வாரிசுகளாக நாமகரணம் செய்து கொண்ட கொலைகாரர்களும்!**





எனது வாழ்நாளில் மூன்றுவிதமான காந்திகளின் தரிசனத்தை நான் வெள்வேறு முறைகளில் பெற்றுள்ளேன்.

அதில் ஒருவர் இந்தியாவின் தேசபிதா எனவும், அகிம்சைத் தத்துவத்தின் தந்தை எனவும், மகாத்மா எனவும் வர்ணிக்கப்படும் மோகன்தாஸ் காந்தி. இவரை நான் கண்டது கிடையாது. நான் பிறப்பதற்கு 16 நாட்கள் முன்னதாக அவரை இந்துத்துவ வெறியர்களின் பிரதிநிதியான நதுராம் விநாயக் கோட்சே தனது துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாக்கிவிட்டான்.

காந்தி பற்றி எனது ஆரம்பக் கல்வியிலேயே பல விடயங்கள் எனக்குக் கற்பிக்கப்பட்டன. அத்துடன் அந்தக் காலங்களில் யாழ்ப்பாணத்திலுள்ள அநேகரின் வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் ஆகியோரின் உருவப் படங்களை மாட்டி வைப்பது ஒரு வழக்கமாக இருந்தது. அவர் இறந்து சுமார் 15 வருடங்களின் பின்னர், எனது 16வது வயதில் நான் அரசியலில் ஈடுபடத்தொடங்கிய காலத்தில், காந்தி பற்றி இரண்டு விதமான விமர்சனச் சொற்றொடர்களைக் கேட்டேன்.

ஒன்று, எந்த பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியாவின் தேசிய சுதந்திரத்தை மீட்க காந்தி போராடினாரோ, அந்த சூரியன் அஸ்தமிக்காத பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் தலைவர்கள் காந்தியைப் பாhத்து, அரை நிர்வாணப் பக்கிரி என கேலியாகவும், அகங்காரத்துடனும் சொன்ன வார்த்தைகள்.

இரண்டாவது, மாபெரும் பாட்டாளிவர்க்க புரட்சித் தலைவர்களான லெனின், ஸ்டாலின் ஆகியோரால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது சோசலிச நாடான சோவியத் யூனியனின் சொற்களஞ்சியத்தில் (நுnஉலஉடழியநனயை) காந்தியின் பெயருக்கு வரைவிலக்கணம் வழங்குகையில், அவரை வைதீகப் பிற்போக்குவாதி எனக் குறிப்பிட்டிருந்த விடயமாகும்.

அதாவது ஒன்று காந்தி பற்றிய தீவிர ஏகாதிபத்திய நோக்கு. மற்றது அவர் பற்றிய தீவிர கம்யூனிச நோக்கு.

நிச்சயமாக காந்தி இந்திய நிலப்பிரபுத்துவ சக்திகளினதும், முதலாளித்துவ சக்திகளினதும் பிரதிநிதி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர் அந்தச் சக்திகளினதும், இந்தியாவின் பரந்துபட்ட வெகுஜனங்களினதும் தேசிய சுதந்திர வேட்கையைப் பிரதிபலித்து நின்றதால், தனக்கு அரசியல் ரீதியில் எதிராக நின்ற சுபாஸ் சந்திரபோசையும், கம்யூனிஸ்ட்டுகளையும் பின்தள்ளி இந்தியாவின் தேசபிதாவாகவும், கேள்விக்கப்பாற்பட்ட தலைவராகவும் தோற்றம் பெற்றுவிட்டார். அவரது அரசியல் நிலைப்பாடு, தனிப்பட்ட வாழ்வு என்பனவற்றுக்கு அப்பால், இன்று அவர் இந்தியாவின் தேசபிதாவாக மட்டுமின்றி, உலகளாவிய அகிம்சா தத்துவத்தின் பிதாமகராகவும் கொண்டாடப்படுகிறார்.

இரண்டாவதாக நான் குறிப்பிடும் காந்தி, நமது இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளால் குறிப்பிடப்படும் ஈழத்துக்காந்தி, அல்லது தந்தை சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்களை ஆகும். இந்தியக் காந்தி இடுப்பில் ஒரு துண்டுத் துணியுடன் வலம் வந்து அரை நிர்வாணப் பக்கிரி எனப் பெயர் பெற்றார் என்றால், நமது ஈழத்துக்காந்தி கோர்ட்டும் சூட்டும் அணிந்து பவனி வந்து, காற்சட்டைக் காந்தி என்ற செல்லப் பெயரைப் பெற்றுக் கொண்டார். இவரும் அகிம்சை வழியே தனது கொள்கை எனக் கூறிக்கொண்டு, சத்தியாக்கிரகம் போன்ற சப்பாணிப் போராட்டங்களையும் நடாத்தினார்.

அதேநேரத்தில், 1970ல் தமிழ் தலைவர்களுக்கு சென்மத்திலும் பிடிக்காத சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான இடதுசாரிகளுடனான கூட்டரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தவுடன், செல்வநாயகத்தின் தமிழரசுக்கட்சி, அதற்கெதிராகத் தமிழ் இளைஞர்களை வன்முறைப் போராட்டங்களில் தூண்டிவிட்டது. இந்த நேரத்தில் இந்தியா தனது எதிரி நாடான பாகிஸ்தானை உடைத்து, அதன் கிழக்குப் பகுதியை பங்களாதேஸ் என்ற புதிய நாடாக உருவாக்கியது.

அதைக்கண்டு பூரித்துப்போன தமிழரசுக்கட்சியினர், யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஒரு பெரும் விழா நடாத்தி, அதில் செல்வநாயகம் தலையில் ஒரு மலர் கிர்Pடத்தைச் சூடி, அவரது பெயருக்கு முன்னால் இருந்த ஈழத்துக்காந்தி என்ற அடைமொழியை மாற்றி, அவரது பெயருக்கு முன்னால் ஈழத்து முஜீபுர் ரஜ்மான் எனற புதிய பெயரைச் சூட்டிக் கொண்டனர். அதன்மூலம் அதுவரை காலமும் அகிம்சாவாதியாகக் காட்சியளித்த செல்வநாயகம், பங்களாதேசின் தேசபிதா, ஆயுதப் போராளி முஜிபுர் ரஜ்மானின் பெயரைச் சூடிக்கொண்டு, வன்முறை அரசியல்வாதியாகக் காட்சிப்படுத்தப்பட்டார்.

அதாவது காத்தவராயன் கூத்தில் வரும் முற்காத்தான், பிற்காத்தான் என்பது போல, செல்வநாயகம் தனது அரசியல் வாழ்வின் முற்பகுதியில் அகிம்சாவாதியாகவும், பிற்பகுதியில் ஆயுதக் கலாச்சாரத்தின் பிரதிநிதியாகவும் அர்த்தநாரீஸ்வரராக மாறிவிட்டார். இந்தியக் காந்தியினால் உருவாக்கப்பட்ட காந்தீயம் என்னும் தத்துவம், இலங்கை தமிழ் அரசியல்வாதிகளால் இவ்வாறு (வன்முறை ரீதியாக) பரிணாம வளர்ச்சியை அடைந்தது.

இந்தியக் காந்தி சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதியாகவும், சில சமயங்களில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்பவராகவும் இருந்த போதிலும், அவர் தேசிய சுதந்திரப்போராட்ட வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஈழத்துக்காந்தி செல்வநாயகமோ தமிழ் பிற்போக்கு சுரண்டும் வர்க்கங்களின் பிரதிநிதியாக இருந்ததுடன், முழுக்க முழுக்க ஏகாதிபத்தியதாசராகவும் இருந்தார். அவர் தமிழ் மக்களின் உண்மையான எதிரியான வெளிநாட்டு ஏகாதிபத்தியங்களை எதிர்க்காமல், சிங்கள ஏகாதிபத்தியம் என்னும் புதிய ஏகாதிபத்தியம் பற்றிப் பேசி, தமிழ் மக்களை இனவாதப் பாதையில் இழுத்துச் சென்றார்.

அதிலும் உண்மையான சிங்களப் பேரினவாத சக்திகளையும், முதலாளித்துவ -ஏகாதிபத்திய சக்திகளையும் பிரதிநித்துவம் செய்த ஐக்கிய தேசியக் கட்சிக்கு விதிவிலக்களித்து, அவர்களுடன் நட்புப்பூண்டுகொண்டு, சிங்கள மத்தியிலிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் இடதுசாரிச் சக்திகளுக்கு எதிராகத் தனது ஈட்டிமுனையைச் செலுத்தினார். இந்தியக் காந்தி வெள்ளையனே வெளியேறு என கோசமிட்டார். ஆனால் நமது ஈழத்துக்காந்தியோ வெள்ளையனே வெளியேறாதே எனக் கேட்டுக்கொண்டார். (1956ல் பண்டாரநாயக்க அரசாங்கம்



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

திரிகோணமலையிலும் கட்டுநாயக்காவிலும் இருந்த பிரித்தானிய கடற்படை, விமானப்படைத் தளங்களை வெளியேற்றிய போது, அவர்களை வெளியேற்ற வேண்டாம் என, செல்வநாயகம் பிரித்தானிய எலிசபெத் மகாராணிக்கு தந்தி அனுப்பினார்!)

இந்த ஈழத்துக்காந்;தி செல்வநாயகத்தின் காலத்தில் அவரது ஏகாதிபத்திய சார்பு, தமிழ் மேட்டுக்குழாம் சார்ந்த கொள்கைகளுக்கு எதிராகப் போராடிய கம்யூனிஸ்ட் கட்சியில், என்னையும் ஒருவனாக இணைத்துக்கொண்டு, அப்போராட்டத்தில் பங்கேற்றதற்காக நான் வாழ்நாள் முழுக்கப் பெருமைப்பட முடியும்.

அடுத்ததாக நான் தரிசித்த காந்தி, புலிகளின் சித்திரவதை முகாம்களில் வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான கைதிகளுக்குப் பொறுப்பான எமது சிறைச்சாலைப் பொறுப்பாளர் காந்தி அண்ணை. இவனுக்கு காந்தி என்ற பெயரைத் திட்டமிட்டுத்தான் புலிகளின் தலைமை வைத்திருக்கிறது என நினைக்கிறேன். இவனுக்கும் காந்தியக் கொள்கைகளுக்கும் துளி மருந்துக்கும் எவ்வித ஒட்டுறவும் கிடையாது.

இந்தியக் காந்தி அகிம்சையைப் போதித்தார். ஆனால் இறுதியில் ஆயுத பலாத்காரத்துக்குப் பலியானார். இவனோ காந்தி என்ற பெயரை வைத்துக்கொண்டு உச்சக்கட்ட வன்முறையில் ஈடுபட்டான். தனது இயக்கத்தால் கைதுசெய்யப்படும் அப்பாவிப் பொதுமக்களை அடித்து உதைத்துச் சித்திரவதை செய்வது, கைகால்களை முறிப்பது, இறுதியில் கொலை செய்வது, இவைதான் இவன் நாளாந்தம் மேற்கொண்ட பணிகள். தினசரி சிலரையாவது கொலை செய்யாமல் இவனும், இவனது தலைவர்களான பிரபாகரன், பொட்டம்மான் போன்றவர்களும் சந்தோசமாகத் தூங்கியது கிடையாது.

இந்திய அமைதிப்படை இலங்கை வந்தபோது, அதனுடன் வலிந்து சண்டையைத் தொடக்கி, அப்படையின் மூலம் தமிழ்ப் பொதுமக்களுக்குப் பல துன்பங்களை வரவழைத்த புலிகளின் தலைமை, கோட்சே காந்தியைக் கொன்றான். ஆனால் ராஜீவோ காந்தியத்தையே கொன்றான் என சுவர்களில் எதுகை மோனையாக வசனம் எழுதிக்கொண்டு, மறுபக்கத்தில் காந்தியை அவமரியாதை செய்வதற்காகத் தமது கொலைகாரர்களில் ஒருவனுக்கு காந்தி எனப் பெயரிட்டுள்ளனர் என்றால், புலிகளது நயவஞ்சகத்தனமான நடவடிக்கையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தக் காந்தியும், அவனுக்கு இந்தப் பெயரை நாமகரணம் செய்த அவனது தலைவர்களும், உண்மையில் தமிழப்; பாசிசத்தின் மூலகர்த்தாக்களாவர். இந்தியக் காந்தியின் அகிம்சைத் தத்துவத்தை எப்படி ஈழத்துக்காந்தி செல்வநாயகமும் அவரது சீடர்களும், உருமாற்றி அகிம்சையிலிருந்து ஆயுத பலாத்காரத்துக்குக் கொண்டு சென்றார்களோ, அந்த ஈழத்துக்காந்தியின் வாரிசாகத் தோன்றிய புலிகள், அதை மேலும் உருமாற்றி முற்றுமுழுதான பாசிசமாக வடித்தெடுத்தார்கள். இதைக் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை என்று சொல்வதா? அல்லது ஈழத்துத் தமிழர்களின் வரலாற்றில் எதிர்மறையான பரிணாம வளர்ச்சி என்று சொல்வதா?

எனது கட்டுரைத் தொடரில் புலிகளின் சித்திரவதை நடவடிக்கைகளுடன் நேரடியாகத் தொடர்புபடாத இவ்வகையான சில விடயங்களை நான் தொட்டுச் செல்வதின் நோக்கம், புலிகளின் இந்தப் பாசிச நடவடிக்கைகளின் நதி மூலம் ரிசி மூலமான அரசியல் அடித்தளம் என்ன? அது என்ன வர்க்க அடிப்படையைக் கொண்டு செயல்படுகிறது என்பதை எனது இந்தத் தொடரினை வாசிப்பவர்களுக்கு விளங்க வைக்கும் ஒரு முயற்சியாகவே.

இப்பொழுது நான் காந்தியத்தின் (உண்மையான காந்தி என்னை மன்னிப்பாராகுக) எமது காலகட்ட வளர்ச்சியின் ஓர் உருவமான புலிக் காந்தியின் முன்னால் மீண்டும் நிறுத்தப்பட்டிருக்கிறேன். அவன் என்னை மீண்டும் அழைத்ததின் நோக்கம் என்னவெனத் தெரியாத போதிலும், என்னுடன் தொடர்பான ஏதோ சில விடயங்கள் அவனிடம் புதிதாகக் கிடைத்திருப்பதன் பயனாகவே, நான் அவனுக்கு முன்னால் நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்பது மட்டும் எனக்குப் புரிந்தது.

நான் நினைத்தது போலவே காந்தி தனது மிரட்டும் முழிக்கண்களால் என்னை உருட்டி உருட்டிப் பார்த்துவிட்டு, “இன்னும் என்னென்ன விசயங்கள் சொல்லாமல் ஒளிச்சு வைச்சிருக்கிறாய்?” என்று ஒரு அதட்டலுடன் என்னைக் கேட்டான்.

நான் பதில் சொல்வதற்கு முன்னர், அவன் வழமையாகக் கையில் வைத்திருக்கும் கொட்டன் எனது தோள்மூட்டைப் பதம் பார்த்துவிட்டது.

மேலும் தொடரும்.

முன்னைய பதிவுகள்